[1978 பிப்ரவரி 28

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதன்மைக்கல்வி அலுவலகம்.

*308 வின—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்று தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு இவ்வளவு நாட்களாகியும் இதுவரையில் தனியாக முதன்மைக் கல்வி அலுவலகம் இல்லாமல் இருப்பது பெரிய குறையாக இருப்பதால் வருகின்ற கல்வி ஆண்டுக்கு முன்பாகவே இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பரிசீலனை முடிந்தவுடன் முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகள்.

*309 வின—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) புதிய மருத்துவ மனைகள் கட்டத் திட்டமுள்ளதா?

(இ) ஆம் எனில், இவ்வாண்டு எத்தனை இடங்களில் கட்டப்படும்?

1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளின் எண்ணிக்கை—நான்கு.

1. சென்னை (அயனாவரம்).
2. சென்னை (கலைஞர் கருணாநிதி நகர்).
3. மதுரை.
4. கோவை.

(ஆ) ஆம்.

(இ) சேலம், வேலூர் ஆகிய இரண்டு இடங்களில் கட்டப்படும்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, கோவையிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் போதிய அளவிற்குப் படுக்கை இல்லாத காரணத்தினால் நோயாளிகள் அங்கேயிருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவது அரசுக்குத் தெரியுமா? எனவே, அங்கே மேலும் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள மருத்துவமனையை நானும் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் 9 ஆம் தேதி இரவு 12-20 மணிக்கு இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறோம். அன்று காலையிலும் செய்தோம். இப்படிப்பட்ட புகார் எங்களிடம் வரவில்லை. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் யூனிபார்ம் அணிய வேண்டுமென்று சட்டம் இருந்தாலும் அதை மீறுகின்ற வகையிலே யூனிபார்ம் உடை அணியாமல் சாதாரண உடையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நான் இன்ஸ்பெக்ஷன் செய்தபொழுது கோவையிலே அப்படி டாக்டர்கள் இருந்ததைப் பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, சிங்காநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சுகாதார முறைப்படி.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அடுத்த கேள்வி. இப்பொழுது இருக்கும் கேள்வியைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இ.எஸ்.ஐ. மருத்துவமனை நம்முடைய மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. அவைகளில் மருத்துவர்களும் சரியாகப் பணியாற்றுவதில்லை, மருந்துகளும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று தொழிலாளர்கள் மத்தியில் சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் சரியான முறையில் இன்ஸ்பெக்ஷன் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது பரிசோதனைகள் நடைபெறுகிறதா? அப்படி நடைபெற்றிருந்தால் விவரம் என்ன என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய குற்றச்சாட்டு ஓரளவுக்கு உண்மை. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் துறை அமைச்சர் என்ற முறையில் சென்னையிலிருந்து செங்கோட்டை வரையில் அநேகமாக எல்லா மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் தனியாகவும், அதிகாரிகளுடனும், சட்டமன்ற உறுப்பினர்களுடனும் பரிசோதனை செய்திருக்கிறேன். 'அப்பிரிஸியபில் இம்ப்ரூவ்மெண்ட்' பாராட்டக்கூடிய அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் அவர்கள் பருவ காலத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்கள் என்ற காரணத்தால் பயன்படுத்த முடியாமல் போகிறது. மாநில லேபர் அட்வைசரி போர்டு, இந்தத் திட்டத்தைச் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. இந்த அரசு உடனடியாக அவர்களுக்கும், இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி முடிவெடுக்க வேண்டியது மத்திய அரசு. இருந்தாலும் அண்மையிலே கூடயிருக்கின்ற மாநில அட்வைசரி போர்டு மூலம் மீண்டும் வலியுறுத்த மாண்புமிகு உறுப்பினரவர்கள் சார்ந்த இயக்கத்திற்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவமனைகளில் இருக்கும் மருந்துகளில் 90 சதவிகிதம் வெளியிலே விற்கப்படுவதாகவும், ஒரு மருத்துவமனையில் ஊசி மருந்துக்குப் பதிலாக மண்ணெண்ணெயை ஏற்றியதாகவும் முதலமைச்சரவர்

1978 பிப்ரவரி 28]

கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரது செல்லப் பிள்ளையாக, மண்டு மந்திரி என்று அழைக்கப்படும் அமைச்சரவர்கள் அதைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, செல்லப்பிள்ளை என்று சொல்வதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னது மருத்துவமனை. இது தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை.

*310 வினா—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை அருகில் உள்ள சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சூட்ட வேண்டுமென்ற திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தினை மறுபரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, கோவையை அடுத்துள்ள சிங்காநல்லூரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அறிஞர் அண்ணாவினுடைய பெயரை வைக்க வேண்டுமென்பது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சொல்லி வருகின்ற ஒன்று. அதனைக் கைவிட்டு விட்டதா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று 1969-ல் அரசு முடிவெடுத்தது. தொழிற் சங்கங்கள் திரு. என்.ஜி.ஆர். அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்றிருந்தது. ஆனால், மத்திய அரசின் ஆணையின்படி யாருடைய பெயரும் வைக்கக் கூடாது என்ற காரணத்தினால், யாருடைய பெயரும் வைக்கப்படவில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே அரசு ஏற்கனவே ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. அந்த முடிவினுடைய அடிப்படையில் மீண்டும் ஏதாவது பெயர் வைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?